# ஆஸ்துமா அறிவோம்

ஆஸ்துமா என்பது ஒவ்வாமையால் ஏற்படக்கூடிய ஒரு வகை நுரையீரல் நோய் ஆகும். இந்த நோயில் மூச்சுக்குழாய் சுருக்கம் ஏற்பட்டு அதனால் மூச்சு விடுதலில் சிரமம் ஏற்படுத்துகிறது.

இந்த நோய் சிறியவர் முதல் பெரியவர் வரை யாருக்கும் வரலாம். பரம்பரையாக வரவும் வாய்ப்புள்ளது. ஆனால் இது ஒரு தொற்றுநோய் கிடையாது.

மூச்சுவிட சிரமம், நெஞ்சில் விசில் சத்தம், வறட்டு இருமல், அடிக்கடி நெஞ்சில் சளி பிடித்தல் போன்றவை இதன் அறிகுறிகள் ஆகும்.

இந்த நோயை "ஸ்பைரோமெட்ரி" எனும் கருவியின் மூலம் கண்டறியலாம்.

ஆஸ்துமாவின் வெளிப்பாடு கீழ்கண்ட க ாரணங்களின் தாக்கத்தால் ஏற்படலாம். சளி, சிகரெட் புகை, பட்டாசு புகை, பருவநிலை மாற்றம், பூஞ்சை காளான், தூசி, தொழிற்சாலை மாசு, விலங்குகளின் உரோமம்.

ஆஸ்துமாவை பொருத்தவரை மருந்துகளை கொண்டு முழுவதுமாக கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். நீண்ட நாள் மருந்து எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும். மருந்தின் அளவை மருத்துவரின் கண்காணிப்பின் கீழ் மட்டுமே அதிகப்படுத்தவோ குறைக்கவோ நிறுத்தவோ வேண்டும்.

ஆஸ்துமாவிற்கு கட்டுப்பாட்டு மருந்துகள், நிவாரணி மருந்துகள் என இரு வகை மருந்துகள் உண்டு.

கட்டுப்பாட்டு மருந்துகளே மிக முக்கியமான மருந்துகள். இவற்றை நீண்ட நாட்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். எந்த பக்க விளைவுகளும் இருக்காது. இன்ஹேலர் வகை கட்டுப்பாட்டு மருந்துகள் மிகவும் நல்ல பலனை கொடுக்கும். இன்ஹேலர் மருந்துகள் வாய் வழியாக சாப்பிடும் மருந்துகளோடு ஒப்பிடும் போது மிகக் குறைந்த அளவே (அதாவது மைக்ரோ கிராமில்) தேவைப்படும்.

நிவாரணி மருந்துகள் ஆஸ்துமாவின் வெளிப்பாடு தீவிரமாக இருக்கும் போது மட்டும் எடுத்தால் போதும். நிவாரணி மருந்துகளை மட்டும் தனியாக நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்ள கூடாது.

ஆஸ்துமா நோயின் வெளிப்பாடு நீண்ட இடைவெளிக்குப் பின் (உதாரணமாக 6 மாதம் / ஒருவருடம்) கூடவரும். இது இந்த நோயின் தன்மையாகும். இடைப்பட்ட காலத்தில் எந்த ஒரு அறிகுறியும் இல்லாமல் கூட இருக்கும். இது ஆஸ்துமா குணமாகிவிட்டது என்பதல்ல. கட்டுப்பாட்டில் உள்ளது என்று புரிந்து கொள்ள வேண்டும். மருந்து எடுத்தால் நன்றாகவும், மருந்தை விட்டால் மீண்டும் வரக்கூடிய தன்மையுடையது ஆஸ்துமா.

ஆஸ்துமாவை பொருத்தவரை சரியாக கண்டறிந்து அதன் தன்மையை உணர்ந்து, தீவிரத்தை அளவிட்டு முறையான மருந்துகளை எடுத்துக்கொண்டால் மிகவும் சந்தோசமான நிம்மதியான வாழ்க்கையை ஆஸ்துமா உள்ளவர்களால் வாழமுடியும்.


## மேலும் விபரங்களுக்கு

**Dr.M. Balachandar** MD.,DNB (Chest).,FCCP(USA)

**Chest Physician**

Swasam Respiratory Centre
Be Lung Friendly

# சுவாசம் நுரையீரல் நோய் சிகிச்சை மையம்

பசுமை பார்மஸி பின்புறம், 194, என்.எஸ்.ஆர். ரோடு,

சாயிபாபா காலனி, கோவை.

**+91 - 88708 61441**